## ஏப்ரல்– 02 – திங்கள்

**“அவர்கள் பெரு மகிழ்ச்சியுள்ளவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்” (மத். 28:8)**

**முதல் வாசகம் :திருத்தூதர் பணிகள்: 2: 14,22 – 33**

பெந்தகோஸ்தே நாளில் பேதுரு பதினொருவருடன் சேர்ந்து, எழுந்து நின்று, உரத்தக் குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார் ”யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே, இதைத் தெரிந்துக்கொள்ளுங்கள். எனது சொற்களைக் கவனித்துக் கேளுங்கள். இஸ்ரயேல் மக்களே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்.கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்லசெயல்களையும் அருஞ்செயல்களையும் அடைய ாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியா கக்காண்பித்தார். இது நீங்கள் அறிந்ததே. கடவுள் தாம் வரையறுத்துள்ள திட்டத்தின்படியும், தம் முன்னறிவின்படியும் இந்த இயேசுவை உங்கள் கையில் விட்டுவிட்டார். நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்துக்கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை மரணவேதனையினின்று விடுவித்து உயிர்த்தெழச்செய்தார். ஏனென்றால் மரணம் அவரைத் தன் பிடியில் வைத்திருக்க முடியவில்லை. தாவீது அவரைக்குறித்துக் கூறியது “நான் ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே நான் அசைவுறேன். இதனால் என் இதயம் பேருவகைகொள்கின்றது என் நா மகிழ்ச்சியால் நிறைந்துள்ளது. என் உடலும் எதிர்பார்ப்பில் நிலைத்திருக்கும். ஏனென்றால் என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர். உம் தூயவனைப் படுக்குழியைக் காண விடமாட்டீர். வாழ்வின்வழியை நான் அறியச்செய்வீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு.“ ”சகோதர சகோதரிகளே, நமது குல முதல்வராகிய தாவீதைக் குறித்து நான் சொல்வதை மறுக்கமாட்டீர்கள். அவர் காலமாகி அடக்கம் செய்யப்பட்டார். அவர் கல்லறை இந்நாள்வரை நம்மிடையே இருக்கிறது. அவர் இறைவாக்கினர் என்பதால், தம் வழித்தோன்றல் ஒருவர் அவரது அரியணையில் வீற்றிருப்பார் என்று கடவுள் உறுதியாக ஆணையிட்டுக் கூறியதை அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்து, “அவரைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர் அவரது உடல் படுகுழியைக் காணவிடமாட்டீர்“ என்று கூறியிருக்கிறார். கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். அவர் கடவுளின் வலதுப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும் கேட்பதும் இதுதான்.

**பதில்பாடல் :** இறைவா என்னைக் காத்தருளும். உம்மிடம்
நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

**நற்செய்தி : மத்தேயு 28 : 8 – 15**

அக்காலத்தில் கல்லறையில் இயேசுவைக்காண வந்த பெண்கள் கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், ”அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்” என்றார். அவர்கள் போய்க்கொண்டிருந்த போது காவல் வீரருள் சிலர் நகரத்திற்குள் சென்று, நிகழ்ந்தவை யாவற்றையும் தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து அப்படை வீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, ”நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர்” எனச் சொல்லுங்கள். ஆளுநர் இதைக் கேள்வியுற்றால் நாங்கள் அவரை நம்பச் செய்து நீங்கள் தொல்லைக்கு உள்ளாகாதபடி பார்த்துக் கொள்வோம்” என்று அவர்களிடம் கூறினார்கள். அவர்களும் பணத்தைப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தார்கள். இந்நாள் வரை இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது. பதினொரு சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே கலிலேயாவிலுள்ள ஒரு மலைக்குச் சென்றார்கள். அங்கே அவரைக் கண்டு பணிந்தார்கள். சிலரோ ஐயமுற்றார்கள். இயேசு அவர்களை அணுகி, ”விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது.

**தியானம்:** இயேசு தாம் முன்னுரைத்தபடியே இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் உயிர்த்தெழுந்ததை யாரும் கண்டதில்லை. ஆயினும் உயிர்த்த இயேசு மகதலாமரியாவிற்கும் சீடர்களுக்கும் தோன்றினார். அவர்களோடு பேசினார்.“ அஞ்சாதீர்கள் என் சகோதரர்களிடம் சென்று அவர்களை கலிலேயாவிற்குப் போகும்படி சொல்லுங்கள் அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்” என்றார். இவ்வாறு பயமும், கலக்கமும் சீடர்களை ஆட்கொண்டிருந்த நேரத்தில் இயேசு அமைதியை கொடுத்தார். தமது உயிர்ப்பினை சீடர்களுக்கு உணர்த்தினார். சீடர்களை தமது சாட்சிகளாக வாழப்பணித்தார். கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மிடையே எமது விசுவாசம்தான் அர்த்தமாக இருக்கின்றது. நாங்கள் யாவரும் கிறிஸ்துவை முகமுகமாய் பார்த்ததுமில்லை, பேசியதுமில்லை. ஆனால் இயேசுவின் மீது கொண்டிருக்கும் விசுவாசத்தின் விளைவாக நாம் அவரை தனிப்பட்ட விதத்தில் கண்டுணர வேண்டும். நமது விசுவாசம் இறை அனுபவமாக மாறும்போதுதான் நம் வாழ்வும் சிறந்து விளங்கும். உயிர்ப்பின் ஆற்றல் நம்மை நிரப்பும்போது அவருக்கு சான்று பகிரும் வாழ்வு நம்மிலிருந்து வெளிப்படும். ஆகவேதான் எமது செபத்தாலும் சாட்சிய வாழ்வாலும் இயேசுவின் உயிர்ப்பை நாம் உயிர்த்துணர்வோமாக.